செ.வெ.எண் – 133 நாள் – 30.08.2025

**ஈரோடு மாவட்டம்**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தகவல் –**

**----------------**

ஈரோடு மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அம்மாபேட்டை, அந்தியூர், பவானிசாகர், கோபிசெட்டிபாளையம், கொடுமுடி, நம்பியூர், சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில், ஒன்றியத் தலைப்பின் கீழ் உள்ள ஈப்பு ஓட்டுநர் / பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் / இரவு காவலர் காலிப்பணியிடங்கள் இனசுழற்சி மூலம் பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது தொடர்பான விவரங்கள் www.tnrd.tn.gov.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் மேற்கண்ட இணையதள முகவரியில் இணையதள வழியாக 01.09.2025 முதல் விண்ணப்பிக்கலாம். (இணையதள வாயிலாக மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்). **விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி** 30.09.2025 என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.**